வாக்குண்டாம்

மூலமும் உரையும்.

ன்னை]

[விலை அணா $1\frac{1}{4}$

உ

கடவுள் துணை.

ஔவையார் அருளிச்செய்த

முதுரை என்று வழங்குகின்ற

வாக்குண்டாம்

மூலமும் உரையும்.

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1913

விலை அணா $1\frac{1}{4}$

5712

கடவுள் துணை.

வாக்குண்டாம்

மூலமும் உரையும்.

நூன் முகம்.

வாக்குண்டா நல்ல மனமுண்டா மாமலராள்
நோக்குண்டா மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதந்
தப்பாமற் சார்வார் தமக்கு.

(இதன் பொருள்.) துப்பு ஆர் - பவளம்போற் சிவந்த [துப்பு - பவளம்(போலும் நிறம்), ஆர் - நிறைந்த,] திருமேனி - தேகத்தையும், தும்பிக்கையான் - துதிக்கையையும் உடைய விநாயகரது, பாதம் - திருவடிகளை, பூ கொண்டு - மலரைக்கொண்டு, தப்பாமல் - தவறாமல், சார்வார் தமக்கு - சேர்ந்து பூசிப்பவர்க்கு, வாக்கு உண்டாம் - (நல்ல) வாக்கு உண்டாகும்; நல்ல மனம் உண்டாம் - நல்ல மனம் உண்டாகும்; மா மலராள் - பெருமையுள்ள செந்தாமரைப் பூவிலிருக்கிற ஸ்ரீதேவியினது, நோக்கு உண்டாம் - (அருட்)பார்வை உண்டாகும்; மேனி நுடங்காது - தேகம் (பிணியால்) வாடாது, எ-று.

(கருத்து.) விநாயகரது திருவடிகளைப் பூசிப்பவர்க்குக் கல்வியும், மனத்தூய்மையும், செல்வமும், தேகவலிமையும் உண்டாகும்.

(விசேஷ உரை.) நடங்காது-அஃறிணை ஒன்றன்பாற் படர்க்கை எதிர்மறை வினைமுற்று; நடங்கு-பகுதி, ஆ-எதிர்மறை விகுதி, உகரக் கேடு சந்தி, அனைத்தும் ஓர் பகுதி, து-விகுதி.

நூல்.

1. நன்றி யொருவற்குச் செய்தக்கா லந்நன்றி
என்று தருங்கொ லெனவேண்டா - நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்றருத லால்.

(இ-ள்.) நின்று-நிலைபெற்று, தளரா வளர் தெங்கு - சோர்வடையாமல் வளர்கின்ற தென்னமரமானது, தாள் உண்ட நீரை-(தன்) அடியால் உண்ட ஜலத்தை, தலையாலே - முடியினாலே, தருதலால் - (இளநீராகக்) கொடுத்தலால், ஒருவற்கு - (நற்குணமுடைய) ஒருவனுக்கு, நன்றி செய்தக்கால் - உபகாரங்களைச் செய்தால், அ நன்றி-அவ்வுபகாரங்கள், என்று தரும் என - எந்நாளில் செய்யப்படுமோவென்று, வேண்டா - (செய்தோனால்) வேண்டப்படா, எ-று.

(க-து.) யோக்கியனுக்கு உபகாரம் செய்தால் அவன் அதனினு மேலான உபகாரத்தை விரைந்து வணக்கத்துடன் செய்வான்.

(வி-ரை.) எழுவாய் - நன்றி; பயனிலை-வேண்டா. கொல், தான்-அசை; எ - பிரிநிலை. செய்தக்கால் - காரணப்பொருட்டாய் வந்த வினையெச்சம்; செய்-பகுதி, த, அ-சாரியைகள், உகரக்கேடும் ககரத்தோற்றமும் சந்தி; கால் - இறந்தகால வினையெச்ச விகுதி. தளரா-எதிர்மறை வினையெச்சம், ஈறுதொகுத்தல். வளர் - வினைத்தொகை. நன்றி: நல் - பகுதி, றி - பண்புப்பெயர் விகுதி, லகரம் னகரமானது சந்தி. தரும்: தா- பகுதி, இது த ஆனது குறுக்கல் விகாரம், ரு-விரித்தல் விகாரம், உம் - விகுதி, உகரக்கேடு சந்தி.

2. நல்லா ரொருவர்க்குச் செய்த வுபகாரங்
கன்மே லெழுத்துப்போற் காணுமே - அல்லாத
ஈரமில்லா நெஞ்சத்தார்க் கிந்த வுபகாரம்
நீர்மே லெழுத்திற்கு நேர்.

(இ-ள்.) நல்லார் ஒருவர்க்கு - நற்குணமுடையவராகிய ஒருவருக்கு, செய்த உபகாரம் - செய்த உதவியானது, கல்மேல் எழுத்துப் போல் - கல்லில் செதுக்கிய எழுத்துப்போல, காணும் - தோன்றும் (அவரால் நினைக்கப்படும்); அல்லாத - அவரொழிந்த (யோக்கியரல்லாத), ஈரம் இல்லா நெஞ்சத்தார்க்கு - அன்பில்லாத மனமுடையவர்க்கு, ஈந்த உபகாரம் - செய்த உதவியானது, நீர்மேல் எழுத்துக்கு நேர் - நீரில் (எழுதிய) எழுத்துக்கொப்பாகும் (அவரால் உடனே மறக்கப்படும் என்றபடி), எ-று.

(க - து.) நல்லோருக்குச் செய்த உபகாரம் பயன்றரும்.

(வி-ரை.) எழுவாய் - உபகாரம் உ-ம்; பயனிலை - காணும், நேர். இல்லாதென்பதில் ஈறு தொகுத்தல்; ஈந்த: ஈ - பகுதி, த் - சந்தி, த் - இடைநிலை, அ - பெயரெச்சவிகுதி, சந்தி தகரம் நகரமானது மெலித்தல் விகாரம். நேர் என்னு முதனிலை முற்றுப்பொருளில் வந்தது. ஏ - அசைநிலை.
(உ)

3. இன்னா விளமை வறுமைவந் தெய்தியக்கால்
இன்னா வளவி லினியவும் - இன்னாத
நாளல்லா நாள்பூத்த நன்மலரும் போலுமே
ஆளில்லா மங்கைக் கழகு.

(இ - ள்.) இளமை - இளமைப்பருவத்தில், வறுமை - தரித்திரம், வந்து எய்தியக்கால் - வந்து கூடுமாயின், இன்னா - துன்பந்தருவதாகும்; இன்னா அளவில் - துன்பந்தரும் (முதுமைப்) பருவத்தில், இனியவும் -

இன்பந்தரும் பொருள்களும், இன்னாத - துன்பந் தருவனவாகும்; (இவை) நாள் அல்லா நாள் - காலமல்லாத காலத்தில், பூத்த-புஷ்பித்த, நல் மலரும் - சிறந்த புஷ்பத்தையும், ஆள் இல்லா - நாயகன் இல்லாத, மங்கைக்கு - பெண்ணுக்குண்டாகிய, அழகும் - அழகையும், போலும் - ஒக்கும், எ-று.

(க - து.) வறுமையோடு கூடிய இளமையும், முதுமையோடு கூடிய செல்வமும் பயன்படாவாம்.

(வி-ரை.) எழுவாய்-இளமை, இனிய; பயனிலை - இன்னா, இன்னாத. இன்னா-ஈறுகெட்ட ஒன்றன்பாற்படர்க்கைவினைமுற்று. எய்தியக்கால் - காரணப்பொருட்டாய் வந்த வினையெச்சம்; எய்து-பகுதி, இன்-சாரியை, சாரியையீற்று னகரக்கேடு கடைக்குறை, ய் - சந்தி, அ - சாரியை, க்-சந்தி, கால் - இறந்தகால வினையெச்சவிகுதி. இன்னா அளவு - பண்புத்தொகைநிலைத்தொடர்; இன்னாமையாகிய அளவு என விரியும். இன்னாத: இன்னா-பகுதி, த்-எழுத்துப்பேறு, அ-பலவின்பால் விகுதி. ஏ-அசை. (உ)

4. அட்டாலும் பால்சுவையிற் குன்று தளவல்ல
நட்டாலு நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலு மேன்மக்கண் மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.

(இ-ள்.) அட்டாலும் - காய்ச்சினாலும், பால் சுவையில் குன்று - பாலானது (தன்) மதுரத்தினின்று குறையாது (மிகும்); சங்கு-சங்கு, சுட்டாலும்-(நெருப்பில் வைத்துச்)சுடப்பட்டாலும், வெண்மை தரும் - வெண்ணிறத்தையே காட்டும்; (அதுபோல) கெட்டாலும் - (தமது செல்வம்) கெட்டாலும், மேல் மக்கள் மேல் மக்களே-மேலோர் மேலோராம் குணத்தையே காட்டுவர்; அளவு அல்ல நட்டாலும் - நெடுநாள்

சிநேகித்தாலும், நண்பு அல்லார் - சிநேகத்தன்மை யில்லார், நண்பு அல்லர் - சிநேகத்தன்மை உடையராகார், எ-று.

(க-து.) மேலோரோடு சிநேகிக்கவேண்டும்.

(வி-ரை.) எழுவாய்-மேன்மக்கள், நண்பல்லார்; பயனிலை-மேன்மக்கள், நண்பல்லர். சுவையின்-இதில் ஐந்தனுருபு நீக்கப்பொருள். முன்னுள்ள உம்மைகள் உயர்வுசிறப்பு; பின்னுள்ள உம்மைகள் எதிர்மறை; அட்டால், சுட்டால், கெட்டால்-அடு, சுடு, கெடு பகுதிகள் இரட்டித்தது விகாரம், ஆல் எதிர்கால வினையெச்சவிகுதி, இகரக்கேடு சந்தி. நட்டால் : நள்-பகுதி, து - சாரியை, ஆல் - விகுதி, ளகர தகரங்கள் டகரமானதும், உகரக்கேடும் சந்தி. அளவளாய் என்றும்பாடம்; அளவளாய்-கலந்து. (ச)

5. அடுத்து முயன்றாலு மாகுநா ளன்றி
எடுத்த கருமங்க ளாகா - தொடுத்த
உருவத்தா னீண்ட வுயர்மரங்க ளெல்லாம்
பருவத்தா லன்றிப் பழா.

(இ - ள்.) தொடுத்த - கிளைத்த, உருவத்தால் நீண்ட - உருவத்தினால் நீண்டிருக்கின்ற, உயர் மரங்கள் எல்லாம் - உயர்வாகிய எல்லா மரங்களும், பருவத்தால் அன்றி - (பழுக்கும்) காலத்தில் அல்லாமல், பழா - பழுக்காவாம்; (அதுபோல) அடுத்து முயன்றாலும் - மேலுமேலும் முயற்சிசெய்தாலும், ஆகும் நாள் அன்றி - முடியுங் காலம் அல்லாமல், எடுத்த கருமங்கள் ஆகா - (தான்) மேற்கொண்ட தொழில்கள் முடியாவாம், எ-று.

(க-து) முடியுங்காலம் அறிந்து யாதொரு தொழிலையுந் தொடங்கல் வேண்டும்.

(வி-ரை.) எழுவாய் - கருமங்கள் ; பயனிலை - ஆகா. முயன்றால்: முயல்-பகுதி, ஆல் - எதிர்கால வினையெச்சவிகுதி, து - சாரியை, லகர தகரங்கள் றகரமானதும், முன்னது மெலிந்ததும் சந்தி விகாரங்கள்; பருவத்தால் - உருபுமயக்கம். உம்மை - இறந்தது தழீஇயதனோடு உயர்வுசிறப்புமாம். அன்றி - குறிப்பு வினையெச்சம்; அல், றி - பகுதி, விகுதிகள். ஆகா, பழா - எதிர்மறை வினைமுற்றுக்கள். (௫)

6. உற்ற விடத்தி லுயிர்வழங்குந் தன்மையோர்
பற்றலரைக் கண்டாற் பணிவரோ - கற்றூண்
பிளந்திறுவ தல்லாற் பெரும்பாரந் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான்.

(இ - ள்.) கல் தூண் - கல்லுக்கம்பம், பெரும்பாரம் தாங்கின் - பெரிய சுமையைச் சுமந்தால், பிளந்து இறுவது அல்லால் - பிளந்து முறிவது அல்லாமல், தளர்ந்து வளையுமோ-குழைந்து வளையாது;(அது போல) உற்ற இடத்தில்-(மானக்கேடு)வந்தவிடத்தில், உயிர் வழங்கும்-உயிரைவிடும், தன்மையோர்-குணமுடையார், பற்றலரைக் கண்டால் - பகைவரைக் கண்டால், பணிவரோ-வணங்குவரோ (வணங்கார்), எ-று.

(க - து.) மானிகள் தமக்கு என்ன துன்பம் வரினும் பகைவரை வணங்கார்.

(வி-ரை.) எழுவாய்-தன்மையோர்; பயனிலை - பணிவரோ. கற்றூண்-முதற்கருவிப்பொருளில்வந்த மூன்றாம்வேற்றுமை உருபும்பயனுமுடன்தொக்க தொகைநிலைத்தொடர்; ஓ இரண்டும் எதிர்மறை; தன்மையோர் - ஈற்றயல் ஆகாரம் ஓகாரமாய்த் திரிந்தது. தளர்ந்து: தளர்-பகுதி, த் - சந்தி, த் - இடைநிலை, உ - வினையெச்ச விகுதி, சந்தி தகரம் நகரமானது விகாரம். உற்ற : உறு - பகுதி, பகுதி இரட்டி இறந்தகாலங்காட்டியது, அ - விகுதி, உகரக்கேடு சந்தி ; இனிவரும்

பெற்ற அற்ற [illegible] இவ்வகைய. காண் - பகுதி, குறு கிற்று. தான் - அசை. (௬)

7. நீரளவே யாகுமா நீராம்பல் தான்கற்ற
நூலளவே யாகுமா நுண்ணறிவு மேலைத்
தவத்தளவே யாகுமாந் தாம்பெற்ற செல்வம்
குலத்தளவே யாகுங் குணம்.

(இ-ள்.) நீர் ஆம்பல்-நீரில் இருக்கின்ற அல்லியானது, நீர்அளவே ஆகும் - நீரின் உயரத்தின் அளவே உயரும்; (அதுபோல) தாம் கற்ற நூல் அளவே-தாம் படித்த நூலின் அளவாகவே, நுண் அறிவு ஆகும்-நுட்பமாகிய புத்தி உண்டாகும்; தாம் பெற்ற செல்வம்-தாம் அடைந்த ஐசுவரியம், மேலை தவத்து அளவே ஆகும் - முற்பிறப்பிற்செய்த தவத்தின் அளவாகவே உண்டாகும்; குலத்து அளவே குணம் ஆகும்-(தாம் பிறந்த) குலத்தின் அளவாகவே குணங்கள் உண்டாகும், எ-று.

(க - து.) ஒருவருக்கு அறிவு கல்வியின் அளவும், செல்வம் தவத்தின் அளவும், குணம் குலத்தின் அளவும் ஆகும்.

(வி-ரை.) எழுவாய்-அளவு, செல்வம், குணம்; பயனிலை-ஆகும். ஏ நான்கும் தேற்றம். கற்ற : இறந்தகாலப் பெயரெச்சம்; கல் - பகுதி, ற்-இடைநிலை, அ - விகுதி. ஆம் ந - ம் அசை. தவத்தளவு முதலியன ஆறும்வேற்றுமைப் பண்புத் தற்கிழமைப் பொருள். (எ)

8. நல்லாரைக் காண்பதுவு நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவு நன்றே - நல்லார்
குணங்க ளுரைப்பதுவு நன்றே யவரோ
டிணங்கி யிருப்பதுவு நன்று.

(இ - ள்.) நல்லாரை காண்பதுவும் - நற்குணமுடையாரைக் காணுதலும், நன்றே - நலமுடையதே; நலம் மிக்க - நன்மை மிகுந்த, நல்லார்

சொல் கேட்பதுவும் - நல்லவரது சொற்களைக் கேட்டலும், நன்றே - நலமுடையதே; நல்லார் - நற்குணமுடையாரது, குணங்கள் உரைப்பதுவும்-குணங்களைச் சொல்லுதலும், நன்றே-நலமுடையதே; அவரோடு-அந் நல்லவருடன், இணங்கி இருப்பதுவும்-நட்பாயிருத்தலும், நன்று - நலமுடையதே, எ-று.

(க - து.) நல்லாரைக் காணல் முதலியன நல்லனவாம்.

(வி-ரை.) எழுவாய் - காண்பது, கேட்பது, உரைப்பது, இருப்பது; பயனிலை - நன்று. மேல் நின்ற ஏகாரத்தை இச்செய்யுளிறுதியில் நன்றென்பதனோடுங் கூட்டுக. ஏகாரங்கள் தேற்றம். காண்பது முதலிய தொழிற்பெயர்கள் குற்றியலுகர ஈறுகெடாமல் பொதுவிதிப்படி வகர உடம்படுமெய் பெற்றன. ஓடு - இடப்பொருளில் வந்தது. உம்மைகள் உயர்வுசிறப்பில் வந்தன. நன்று: நல், று - பகுதி, விகுதிகள். (அ)

9. தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவுந் தீதே - தீயார்
குணங்க ளுரைப்பதுவுந் தீதே யவரோ
டிணங்கி யிருப்பதுவுந் தீது.

(இ - ள்.) தீயாரைக் காண்பதுவும் - தீக்குணமுடையாரைக் காணுதலும், தீதே - தீயதே; திரு அற்ற-சிறப்பில்லாத, தீயார் சொல் கேட்பதுவும் - தீக்குணமுடையவரது சொற்களைக் கேட்டலும், தீதே- தீயதே; தீயார் - தீக்குணமுடையவரது, குணங்கள் உரைப்பதுவும் - குணங்களைச் சொல்லுதலும், தீதே - தீயதே; அவரோடு-அத்தீக்குணமுடையரோடு, இணங்கி இருப்பதுவும் - நட்பாய் இருத்தலும், தீது - தீயதே, எ-று.

(க - து). துட்டரைக் காணல் முதலியன தீயனவாம்.

(வி-ரை.) எழுவாய் - காண்பது, கேட்பது, உரைப்பது, இருப்பது; பயனிலை - தீது. மேலைச் செய்யுளிற் கூறியவை எல்லாம் இதற்கும் ஒக்கும். உம்மைகள் இழிவுசிறப்பில் வந்தன. (௯)

10. நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம் - தொல்லுலகில்
நல்லா ரொருவ ருளரே லவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யு மழை.

(இ-ள்.) நெல்லுக்கு இறைத்த நீர் - நெற்பயிருக்கு இறைக்கப்பட்ட நீரானது, வாய்க்கால் வழி ஓடி - வாய்க்காலின் வழியே போய், ஆங்கு - அங்குள்ள, புல்லுக்கும் பொசியும் - புற்களுக்கும் கசிந்தூறும்; (அது போல) மழை - மழையானது, தொல் உலகில் - பழமையாகிய உலகத்தில், நல்லார் ஒருவர் உளரேல் - நற்குணமுடையவராகிய வொருவர் இருப்பாராயின், அவர் பொருட்டு - அவரது பொருட்டால் (அவரைப் பற்றியே), எல்லார்க்கும் பெய்யும் - மற்றை யாவர்க்கும் பெய்யாநிற்கும், எ-று.

(க - து.) நல்லவரைச் சேர்ந்த மற்றவர்களும் பயன் பெறுவர்.

(வி-ரை.) எழுவாய் - மழை; பயனிலை - பெய்யும். நான்கன் உருபுகள் கொடைப்பொருளில் வந்தன. புல்லுக்கும் என்பதின் உம்மை இழிவுசிறப்போடு இறந்ததுதழீஇயதுமாம். எல்லார்க்கும் என்பதின் உம்மை முற்றுப்பொருளில் வந்தது. ஓடி : ஓடு - பகுதி, இ-விகுதி, விகுதியே இறந்தகாலங் காட்டும். இணங்கி, ஆகி, வாடி, அமுக்கி முதலியவற்றிற்கும் இவ்வகை உறுப்பமைக்க. (௧௦)

11. பண்டு முளைப்ப தரிசியே யானாலும்
விண்டுமி போனால் முளையாதாம் - கொண்டபேர்

ஆற்ற லுடையார்க்கு மாகா தளவின்றி
ஏற்ற கருமஞ் செயல்.

(இ-ள்.) பண்டு முளைப்பது-(உமி நீங்குதற்கு) முன்னே முளைப்பது, அரிசியே ஆனாலும் - அரிசியாகவே யிருந்தாலும், உமி விண்டு போனால் - உமியானது நீங்கிப்போமாயின், முளையாது - (அவ்வரிசி) முளையாது; (அதுபோல) கொண்ட - (தம்மிடத்து) நீங்காத. பேர் ஆற்றல் - மிக்க வல்லமையை, உடையார்க்கும் - உடையவர்க்கும், அளவு இன்றி - துணைவலி இல்லாமல், ஏற்ற கருமம் - எடுத்துக்கொண்ட தொழிலை, செயல் ஆகாது - செய்து முடித்தல் கூடாது, எ-று.

(க-து.) முடிக்க வல்லவர்க்கும் துணைவலி இல்லாமல் யாதொரு கருமமு முடிக்கலாகாது.

(வி-ரை.) எழுவாய்-செய்தல்; பயனிலை-ஆகாது ஏ-தேற்றம். உம்மை இறந்ததுதழீஇயதனோடு உயர்வு சிறப்பு. விண்டு - வினையெச்சம்; விள்-பகுதி, உ-விகுதி, ட்-இடைநிலை, ளகரத்திரிபு சந்தி. உடையார் - உடன்பாட்டுக் குறிப்பு வினையாலணையும் பெயர். இன்றி - எதிர்மறைக் குறிப்பு வினையெச்சம்; இல் - பகுதி, றி - விகுதி, லகரத்திரிபு சந்தி. அன்றி என்பதும் இப்படியே. ஏற்ற: ஏல், ற், அ - உறுப்புக்கள். போனால்: போ, இன், ஆல் - பகுதி, இடைநிலை, விகுதிகள். இடைநிலை முதல்குறைந்தது. ஆம் - அசை. (கக)

12. மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல்சிறிய ரென்றிருக்க வேண்டா - கடல்பெரிது
மண்ணீரு மாகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரு மாகி விடும்.

(இ-ள்) தாழை - தாழம்பூவின், மடல் பெரிது - இதழ் பெரியது; மகிழ் - (இதழ்கள் சிறியனவான) மகிழம்பூவினது, கந்தம்

இனிது - வாசனை இனியது; கடல் பெரிது - கடல் பெரிது; மண் நீரும் ஆகாது - (அதிலுள்ள நீர்) உடம்பழுக்கைக் கழுவும் ஜலமும் ஆகாது; அதன் அருகு - அந்தக்கடலின் அருகில் (உள்ள), சிறு ஊறல் - சிறிய ஊற்றுக்குழிநீர், உண் நீரும்-உண்ணத்தக்க நீரும், ஆகிவிடும் - ஆகும்; (ஆதலால்) உடல் சிறியர் என்று - (அறிவுடையாரை) உருவத்தால் சிறியவரென்று, இருக்க வேண்டா-(மதியாமல்) இருத்தல் கூடாது, எ-று.

(க - து.) ஒருவரை உருவத்தினாலே மதிக்காமல் குணத்தால் மதிக்கவேண்டும்.

(வி-ரை.) எழுவாய் - இருக்க (இருத்தல்); பயனிலை - வேண்டா. தாழை, மகிழ் - பொருளாகுபெயர். வேண்டா என்பதில் ஈறு தொகுத்தல். பெரிது, இனிது - குறிப்புமுற்று. பெருமை, இனிமை என்பவைகளில் மை ஈறுகெட்ட பெரு, இனி-பகுதி, து-விகுதி, பெரு என்பதில் உகரம் இகரமானது சந்தி. இருக்க என்னுஞ் செயவெனெச்சம் ஈண்டுத் தொழிற்பெயர்ப் பொருள்பட நின்றது. (கஉ)

13. கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் - சவைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம்.

(இ - ள்.) கவை ஆகி - கிளைகளையுடையனவாகியும், கொம்பு ஆகி - கொம்புகளை யுடையனவாகியும், காட்டகத்து நிற்கும் - காட்டில் நிற்கின்ற, அவை - அம்மரங்கள், நல்ல மரங்கள் அல்ல - நல்லமரங்கள் அல்லவாம்; சவை நடுவே - சபைநடுவில், நீட்டு ஓலை-கொடுத்த ஓலையில் (எழுதியிருப்பதை), வாசியா நின்றான் - வாசியாமல் நின்று, குறிப்பு அறியமாட்டாதவன்-(அதன்) கருத்தை அறிந்துகொள்ளத் திறமையில்லாதவனே, நல் மரம் - நல்ல மரமாம், எ-று.

(க-து.) கல்வி அறிவில்லாதவன் ஓரறிவுடைய மரத்தினும் கடையாவன்.

(வி-ரை.) எழுவாய் - அறியமாட்டாதவன், பயனிலை - மரம். நீட்டோலை - வினைத்தொகை நிலைத்தொடர்; நீட்டிய ஓலையென விரியும். ஓலை - இடவாகுபெயர். வாசியா - எதிர்மறை வினைபெச்சம் ஈறுதொக்கது. நின்றான் - வினைமுற்று வினையெச்சமாய் அறிய என்னும் வினைகொண்டது; நில்-பகுதி, ஆன் - விகுதி, ற்-இடைநிலை. ஏ - இரண்டும் அசை. மாட்டாதவன்-வினையாலணையும் பெயர்;ஈற்றில் பிரிநிலை ஏகாரந் தொகுத்தல். (கங)

14. கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானு மதுவாகப் பாவித்துத் - தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி.

(இ-ள்.) கல்லாதான்-(நூல்களைக்) கற்காதவன், கற்ற கவி-(தான்) படித்த பாட்டிற்குப்(பொருள் கூறல்), கானம் மயில் ஆட-காட்டில் மயிலானது (தன் அழகிய கலாபத்தை விரித்து) ஆடாநிற்க, கண்டு இருந்த-(அதைப்) பார்த்திருந்த, வான்கோழி - வான்கோழியானது, தானும் அது ஆக - தானும் அம் மயிலாக, பாவித்து - நினைத்து, தானும் - தானும், தன் பொல்லா சிறகை விரித்து-தனது அழகில்லாத சிறகைப் பரப்பி, ஆடினால் போலும் - நடனஞ் செய்தாற்போலும், எ-று.

(க-து.) கல்லாதவன் பிரசங்கம் இகழப்படும்.

(வி-ரை.) எழுவாய் - கவி; பயனிலை - போலும். உம்மைகள் இரண்டில் முன்னது இழிவுசிறப்பு, பின்னது இழிவுசிறப்போடு இறந்தது தழீஇயது ஆம். பொல்லா - ஈறுகெட்ட பெயரெச்சம்; பொல் - பகுதி, ல் - சந்தி, ஆ - சாரியை, த்-விரித்தல் விகாரம், அ-பெயரெச்ச

விகுதி. கல்லாதான் - எதிர்மறை வினையாலணையும் பெயர். ஏ-அசை. ஆட இங்கு நிகழ்காலம். (கச)

15. வேங்கை வரிப்புலிக்குத் தீர்த்த விடதாரி
ஆங்கதனுக் காகார மானாற்போல் - பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த வுபகாரம்
கல்லின்மே லிட்ட கலம்.

(இ-ள்.) வேங்கை வரி புலிக்கு - வரிகளையுடைய வேங்கைப்புலிக்கு, தீர்த்த விடதாரி - விஷநீக்கியவன் (வயித்தியன்), ஆங்கு - அப்பொழுதே, அதனுக்கு - அந்தப் புலிக்கு, ஆகாரம் ஆனால்போல் - இரையானாற்போல, பாங்கு அறியா - நட்பின் தன்மை அறியாத, புல் அறிவாளர்க்கு - அற்பபுத்தியுடையவருக்கு, செய்த உபகாரம்-செய்த உதவியும், கல்லின்மேல் இட்ட - கல்லின்மேல் போட்ட, கலம் - மட்பாத்திரம்போல (அழியும்), எ - று.

(க - து.) துஷ்டர்களுக்கு உபகாரஞ் செய்தால் கேடுவரும்.

(வி-ரை.) எழுவாய் - உபகாரம்; பயனிலை - கலம். உபகாரமென்பதின் இறுதியில் இறந்தது தழீஇய எச்சவும்மை விகாரத்தால் தொக்கது. 'கல்லின்மேல் இட்டகலம்' என்பதற்குக் கற்பாறையில் தாக்கிய மரக்கலமெனப் பொருள் கூறலும் பொருந்தும். இட்ட - செய்த என்னும் பெயரெச்சம் செயப்படுபொருளைக் கொண்டு முடிகின்றது. வேங்கைப்புலி - இருபெயரொட்டுப் பண்புத்தொகை. வரிப்புலி - இரண்டனுருபும்பயனு முடன்தொக்கதொகை. (கரு)

16. அடக்க முடியா ரறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா - மடைத்தலையில்
ஓடுமீ னோட வுருமீன் வருமளவும்
வாடி யிருக்குமாங் கொக்கு.

(இ - ள்.) கொக்கு - கொக்கானது, மடைதலையில் ஓடி-நீர்மடையினிடத்துச் சென்று, மீன் ஓட-(சிறு) மீன்கள் ஓடாநிற்க, உறு மீன் வரும் அளவும் - (தன்னிரைக்கு) அமைந்தமீன் வருகிறவரைக்கும், வாடி யிருக்கும்-சோர்ந்து இருக்கும்; (அதுபோல) அடக்கம் உடையார்-அடங்கியிருக்குங் குணமுடையவரை, அறிவு இலர் என்று - விவேகம் இல்லாதவர் என்று, எண்ணி - நினைத்து, கடக்க - (அவரை) வெல்ல, கருதவும் வேண்டா - நினைக்கவும் வேண்டுவதில்லை, எ-று.

(க-து) அடக்க முடையரா யிருப்பவரை அறிவிலரென்று வெல்ல நினைக்கலாகாது.

(வி-ரை.) எழுவாய் - கருதல்; பயனிலை - வேண்டா. கருதவென்னும் செயவெனெச்சம் இங்கு தொழிற்பெயர்ப் பொருளில் வந்தது. அடக்கம்: அடங்கு - பகுதி, அம் - விகுதி, உகரக்கேடு சந்தி, ங் - க் ஆனது வலித்தல். உடையார் - குறிப்பு வினையாலணையும் பெயர். உம்மை - இறந்தது தழீஇய எச்சவும்மை. வேண்டா - ஈறுதொகுத்தல். உறுமீன் - வினைத்தொகை நிலைத்தொடர். என்று - இடைச்சொல். ஆம் - அசை. (கசு)

17. அற்ற குளத்தி னறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வா ருறவல்லர் - அக்குளத்தில்
கொட்டியு மாம்பலு நெய்தலும் போலவே
ஒட்டி யுலர்வா ருறவு.

(இ-ள்.) அற்ற குளத்தின் - (நீர்) வற்றிய குளத்தினின்றும், அறு நீர்ப் பறவைபோல் - நீங்குகின்ற நீர்வாழ் பறவைகள்போல், உற்றுழி - (துன்பம்) வந்த இடத்தில், தீர்வார் - நீங்குவோர், உறவு அல்லர் - உறவினர் ஆகார்; அக்குளத்தில் - அந்தக் குளத்தில், கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே - கொட்டிப்பூண்டும் அல்லிக்கொடி

யும் நெய்தற்கொடியும் போலவே, ஒட்டி உலர்வார் உறவு - நீங்காது நின்று வருந்தி இருப்பவரே உறவினராவர், எ-று.

(க-து.) துன்பம் வந்தபோதும் தம்மைவிட்டுப் பிரியாதவரே உறவினராவர்.

(வி-ரை.) எழுவாய் - தீர்வார், உலர்வார்; பயனிலை - உறவல்லர், உறவு. குளத்தின் - ஐந்தனுருபு நீங்கற்பொருளது. உற்றுழி என்பதை ஒருமொழியாகக் கொண்டால் எதிர்கால வினையெச்சமெனவும், தொடர்மொழியாகக் கொண்டால் உற்ற என்பதில் பெயரெச்சவிகுதி ஈற்று அகரம் தொகுத்தலெனவும் கூறுக. உறவு - குணவாகுபெயர். ஏ-பிரிநிலை. 'உறுவார்' என்று பாடமாயின் விட்டுநீங்காதவர் எனப் பொருள் கொள்க. (௧௭)

18. சீரியர் கெட்டாலுஞ் சீரியர் சீரியரே
அல்லாதார் கெட்டா லுமல்லாதார் - அல்லாதார்
பொன்னின் குடமுடைந்தாற் பொன்னாகு மென்னாகும்
மண்ணின் குடமுடைந்தக் கால்.

(இ - ள்.) பொன்னின் குடம் உடைந்தால் - பொன்னாலாகிய குடம் உடையுமானால், பொன் ஆகும் - (அப்பொன்பாத்திரம் முன்போலப்) பொன்னே ஆகும்; மண்ணின் குடம் உடைந்தக்கால்-மண்ணாலாகிய குடமானது உடைந்தால், என் ஆகும்-(அக்கேட்டினால்) என்ன பயன் உண்டாகும்; (அதுபோல) சீரியர் கெட்டாலும் - சிறந்த குணமுடையோர் வறுமையடைந்த காலத்தும், சீரியர் சீரியரே - அம்மேலோர் சிறந்த குணமுடையராகவே மதிக்கப்படுவார்; அல்லாதார் - (சிறந்த குணம்) இல்லாதவர் (கீழோர்), கெட்டாலும் - வறுமையடைந்தாலும், அல்லாதார் அல்லாதார் - கீழ்மக்கள் கீழ்மக்களாகவே மதிக்கப்படுவர், எ-று.

(க-து.) செல்வம் இழந்தகாலத்தில் மேலோர் நன்கு மதிக்கப்படுவர், கீழோர் மதிக்கப்படார்.

(வி-ரை.) எழுவாய் - சீரியர், அல்லாதார்; பயனிலை - சீரியரே, அல்லாதார். சீரியர் என்னும் மொழி மூன்றில் முன்னைய விரண்டும் பண்படியாகப் பிறந்தபெயர்; பின்னையது குறிப்பு வினைமுற்று. ஏ - தேற்றம். உம்மை - உயர்வுசிறப்பு. பொன்னின் மண்ணின் என்பவைகளில் இன் சாரியை. உடைந்தால்: உடை-பகுதி, த்-சந்தி, து-சாரியை, ஆல்-வினையெச்சவிகுதி, த்-ந் ஆக மெலிந்தது. உடைந்தக்கால்-உடை+த்+து+அ+க்+கால், உறுப்புக்கள்; த - ந் ஆக மெலிந்தது; இதில் அ-சாரியை, கால்-வினையெச்சவிகுதி, க்-தோன்றியது சந்தி. (கஅ)

19. ஆழ வமுக்கி முகக்கினு மாழ்கடனீர்
நாழி முகவாது நானாழி - தோழி
நிதியுங் கணவனு நேர்படினுந் தந்தம்
விதியின் பயனே பயன்.

(இ-ள்.) ஆழ் கடல் நீர் - ஆழமாகிய சமுத்திர ஜலத்தை, ஆழ அமுக்கி - முழுக அழுத்தி, முகக்கினும் - மொண்டாலும், நாழி - ஒருபடியானது, நால் நாழி முகவாது - நாலுபடி(நீரை) மொள்ளாது; (அதுபோல) தோழி - தோழியே, நிதியும்-(பெண்களுக்குத்) திரவியமும், கணவனும் - நாயகனும், நேர்படினும் - நேர்பட்டிருந்தாலும், தம் தம் - அவரவருடைய, விதியின் பயனே பயன் - ஊழின் அளவாகிய பிரயோசனமே (அனுபவிக்கப்படும்) பிரயோசனமாகும், எ - று.

(க-து.) பெருஞ்செல்வ முடையாராயினும் ஊழினளவே அனுபவிப்பார்.

(வி-ரை.) எழுவாய் - பயன்; பயனிலை-பயன். முகக்கின் - செயினென்னும் வாய்பாட்டு எதிர்கால வினையெச்சம்; முக-பகுதி, க்-சந்தி,

கு - சாரியை, இன் - வினையெச்ச விகுதி ஆழ்கடல் - வினைத்தொகை நிலைத்தொடர். நாழி - முகத்தலளவை ஆகுபெயர். முகவாது - எதிர்மறை வினைமுற்று; முக - பகுதி, வ் - சந்தி, ஆ - எதிர்மறை விகுதி, அனைத்தும் ஓர் பகுதி, து - ஒன்றன்பால் விகுதி. முகக்கினும், நேர்படினும் என்பவற்றி லும்மை இறந்ததுதழீஇய எச்சவும்மை. நிதியும், கணவனும் என்பவற்றி லும்மைகள் எண்ணுப்பொருள். ஏ - பிரிநிலை. (கக)

20. உடன்பிறந்தார் சுற்றத்தா ரென்றிருக்க வேண்டா
உடன்பிறந்தே கொல்லும் வியாதி - உடன்பிறவா
மாமலையி லுள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரு முண்டு.

(இ - ள்.) வியாதி - நோயானது, உடன் பிறந்தே கொல்லும் - (தம் உடம்போடு) கூடப்பிறந்தே கொல்லாநிற்கும்; உடன் பிறவா - உடன் பிறவாத, மா மலையில் உள்ள மருந்தே - பெரியமலையில் பிறந்த மருந்தே, பிணி தீர்க்கும் - நோயை நீக்கும்; அம்மருந்து போல்வாரும் உண்டு - அம்மருந்தைப்போல உதவுகின்றவர்களும் இருக்கின்றனர்; (ஆதலால்) உடன் பிறந்தார் - உடன் பிறந்தவரே, சுற்றத்தார் என்று - உறவினர் என்று, இருக்க வேண்டா - இருத்தல் கூடாது, எ - று.

(க - து.) உடன்பிறந்தார் தீங்கு செய்தலும், அந்நியர் நன்மை செய்தலும் உண்டு, ஆதலால், உடன்பிறந்தாரையே உறவினரென் றிருத்தலாகாது.

(வி - ரை.) எழுவாய் - (இருத்தல்) இருக்க, பயனிலை - வேண்டா. உடன்பிறந்தார் என்பதில் பிரிநிலை ஏகாரம் தொகுத்தல்; அடியினின்ற இரண்டேகாரமும் அப்பொருளின. உம்-உயர்வுசிறப்பு. வேண்டா என்பதில் து விகுதி விகாரத்தால் தொக்கது. ஈண்டு இருக்க என்னும் வினையெச்சம் தொழிற்பெயர்ப் பொருள்பட நின்றது. (உ௦)

21. இல்லா ளகத்திருக்க வில்லாத தொன்றில்லை
இல்லாளு மில்லாளே யாமாயின் — இல்லாள்
வலிகிடந்த மாற்ற முரைக்குமே லவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும்.

(இ - ள்.) இல்லாள் - (நற்குண நற்செய்கைகளுடைய) மனையாள், அகத்து இருக்க - வீட்டில் இருந்தால், இல்லாதது - (அவ்வீட்டில்) இல்லாத பொருள், ஒன்று இல்லை - ஒன்று மில்லை; இல்லாளும் - மனையாளும், இல்லாளே ஆயின் - இல்லாமற்போவாளாயினும், இல்லாள் - மனையாள், வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல் - கடுஞ்சொற்களைச் சொல்லுவாளாயினும், அ இல் - அவ்வீடு, புலி கிடந்த தூறு ஆய்விடும் - புலியிருந்த புதருக்கு ஒப்பாகும், எ - று.

(க - து.) நற்குண நற்செய்கையையுடைய மனையாளுள்ள வீடே எல்லாப் பொருளும் உள்ளதுபோலும். அப்படியல்லாத வீடு புலி தங்கிய புதருக் கொப்பாகும்.

(வி - ரை.) எழுவாய் - இல்லாதது, இல்; பயனிலை - இல்லை, ஆய்விடும். என்று - எண்ணுகுபெயர். இழிவு சிறப்பும்மை தொக்கது. இல்லாளும் என்பதின் உம்மை உயர்வுசிறப்பு. ஆயின் உரைக்குமேல் என்பவற்றின் எண்ணும்மை விகாரத்தால் தொக்கது. இல்லாதது - இல்+ஆ+த்+அ+து, உறுப்புக்கள். ஆய்: ஆ-பகுதி, ய்-இறந்தகாலங் குறிக்கும் விகுதி. உஉ - வது பாட்டில் போய் என்பதும் இப்படியே. ஆம் - அசை. (உக)

22. எழுதியவா றேமென் றிரங்கிய நெஞ்சே
கருதியவா றேமோ கருமம் - கருதிப்போய்க்
கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்கா யீந்ததேல்
முற்பவத்திற் செய்த வினை.

(இ - ள்.) எழுதிய ஆறு ஆம் என்று இரா - (கடவுள்) கற்பித்த படியே நடக்கும் என்று இராத, மட நெஞ்சே - அஞ்ஞானம்பொருந்திய மனமே, கருதிய ஆறு - (நீ) நினைத்தபடிக்கெல்லாம், கருமம் ஆமோ - (செய்) தொழில்கள் பயனைத்தருமோ (தரா); கருதி போய்- (நல்ல பயனைப் பெறலாமென) நினைத்துச் சென்று, கற்பகத்தை சேர்ந்தோர்க்கு - கற்பக விருக்ஷத்தை அடைந்தவர்க்கு, காஞ்சிரங்காய் ஈந்ததேல்-(அது) எட்டிக்காயைக் கொடுத்ததேயானால்,(அதற்குக்காரணம்) முற்பவத்தில் செய்த - முற்பிறப்பில் பண்ணின, வினை - தீவினையாகும், எ - று.

(க - து.) எத்தொழிலும் விதிப்படியன்றி அவர் நினைத்தபடி முடியாது.

(வி - ரை.) "எழுதிய வாறேகா ணிரங்கு மடநெஞ்சே" எனப் பாடங்கொள்ளின், இரங்கு மடநெஞ்சே - வருந்துகின்ற அறியாமை பொருந்திய மனமே, எழுதியவாறே காண் - கடவுள் விதித்தபடியே ஆகும் என்று அறிவாயாக, எனப் பொருள்படும். எழுவாய் - கருமம்; தோ-எழுவாய் - காரணம்; பயனிலை - ஆமோ, வினை. இரா என்பதில் ஈறுதொகுத்தல். ஓ - எதிர்மறை. சேர்ந்தோர்-வினையாலணையும்பெயர்; ஈற்றபல் ஆ-ஓ ஆபிற்று. எழுதிய: எழுது - பகுதி, இன் - இடைநிலை ஈறுகெட்டது, அ-விகுதி, உகரக்கேடும் யகரத்தோற்றமும் சந்தி. ஆம்-கு என்னும் உயிர்மெய் கெட்டது. ஈந்ததேல் - வினையெச்சம்; வினைமுற்று எல் விகுதி பெறின் வினையெச்சமாம்; எனில் என்னும் வினையெச்சம் எல் என மருவியதெனினும் ஆம். (உஉ)

23. கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ டொப்பாரும் போல்வாரே - விற்பிடித்து
நீர்கிழிய வெய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம்.

(இ-ள்.) கடும் சினத்து - கடுமையாகிய கோபத்தால், கயவர் - கீழ்மக்கள், கற்பிளவோடு ஒப்பர் - கல்லினது பிளவுகளைப்போல்வர் (திரும்பிக்கூடாதவர் என்றபடி); பொன் பிளவோடு ஒப்பாரும்-பொன்னினது பிளப்போடு ஒப்பவர்களும், போல்வர் - ஒப்பானவரும் உளர் (ஒருவர் கூட்டக்கூடுவார்); சீர் ஒழுகு-சிறந்த வழியில் நடக்கின்ற, சான்றோர் சினம் - (அறிவால்) நிறைந்தோருடைய கோபமானது, வில் பிடித்து - வில்லைப்பிடித்து, நீர் கிழிய எய்த வடுபோல - நீர்பிளக்கும்படி (அம்பால்) எய்ததனு லுண்டாகும் வடுவைப்போல, மாறும் - (உடனே) நீங்கும், எ-று.

(க-து.) அதமர் கோபத்தால் வேறுபட்டால் எப்போதும் கூடார்; மத்திமர் ஒருவர் கூட்டக் கூடுவர்; உத்தமர் உடனே கூடுவர்.

(வி-ரை.) எழுவாய் - கயவர், ஒப்பார், சினம்; பயனிலை - ஒப்பார், போல்வார், மாறும். ஒப்பர் - வினைமுற்று; ஒ-பகுதி, ப்-சந்தி, ப்-இடைநிலை, அர் - விகுதி. ஒப்பார், போல்வார், சான்றோர்-வினையாலணையும் பெயர்கள். சான்றோர்: சால்+ற்+அர் - பகுதி, இடைநிலை, விகுதிகள். ல் - ற் ஆய்த் திரிந்து மெலிந்தது. அ - ஓ வானது செய்யுள் வழக்கு. ஓடு இரண்டும் ஒப்புப்பொருளில் வந்தன. கற்பிளவு, பொற்பிளவு இவ்விரண்டும் தொழிற்பண்புத்தற்கிழமைப்பொருளில் வந்த ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். ஏ இரண்டும் ஈற்றசை. (உங)

24. நற்றா மரைக்கயத்தி னல்லன்னஞ் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர் - கற்பில்லா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை யுகக்கும் பிணம்.

(இ-ள்.) நல் தாமரை கயத்தில்-சிறந்த தாமரைகளையுடைய குளத்தில், நல் அன்னம் சேர்ந்தால்போல்-அழகிய அன்னப்பறவைகள் சேர்ந்தாற்போல, கற்றாரை - கல்வியறிவுடையாரை, கற்றாரே காமுறுவர் -

கல்வி அறிவுடையவரே விரும்பிச் சேர்வர்; முதுகாட்டில் - மயானத்தில், காக்கை - காகங்கள், பிணம் உகக்கும் - பிணத்தை விரும்பும்; (அதுபோல) கற்பு இல்லா - கல்வி அறிவில்லாத, மூர்க்கரை - கீழ்மக்களை, மூர்க்கர் முகப்பர் - கீழ்மக்கள் விரும்பித் தழுவுவர், எ- று.

(க-து.) கற்றவர் கற்றவரோடும், மூடர் மூடரோடும் சிநேகஞ் செய்வர்.

(வி-ரை.) கயத்தின் - குளத்திலுள்ள, நல் தாமரை - நல்ல தாமரைப்பூவை, நல் அன்னம் சேர்ந்தாற்போல-நல்ல அன்னப்பறவை சேர்ந்தாற்போல, எனவும் பொருள்படும். எழுவாய் - கற்றார், மூர்க்கர்; பயனிலை - காமுறுவர், முகப்பர். செயப்படுபொருள்-கற்றாரை, மூர்க்கரை. கயம்-குணவாகுபெயர். கற்பு-காரணவாகுபெயர். காமம் என்னும் பண்புட்பெயர், அம் கடைக்குறையாய் உரு என்றும் வினைப்பகுதியோடு சேர்ந்து காமுறு எனநின்று, வகர இடைநிலையும், அர் விகுதியும் பெற்று முடிந்தது. ஏ-பிரிநிலை. போல் என்பதில் அகரம் தொகுத்தல்.

௨௦. நஞ்சுடைமை தானறிந்து நாகங் கரந்துறையும்
அஞ்சாப் புறங்கிடக்கு நீர்ப்பாம்பு - நெஞ்சில்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத் தவர்.

(இ-ள்.) நாகம் - நல்ல பாம்பானது, தான் நஞ்சுடைமை - தான் விஷமுடைத்தாயிருத்தலை, அறிந்து - தெரிந்து, கரந்து உறையும் - ஒளித்துக்கொண்டிருக்கும்; நீர் பாம்பு-(தன்னிடத்தில் விஷமில்லாத) நீர்ப்பாம்பானது, அஞ்சா புறம் கிடக்கும் - பயப்படாமல் வெளியிடத்திருக்கும்; (அதுபோல) நெஞ்சில்-மனத்தினுள்ளே, கரவு உடையார் - வஞ்சனையை உடையவர், தம்மை கரப்பர் - தங்களை மறைப்பர்; கரவு இலா-வஞ்சனையில்லாத, நெஞ்சத்தவர் - மனமுடையார், கரவார் - (தம்மை) மறையார், எ - று.

(க-து.) வஞ்சகர் மறைந்தொழுகுவர்; வஞ்சனை இல்லார் வெளிப் பட்டொழுகுவர்.

(வி-ரை.) எழுவாய் - கரவுடையார், நெஞ்சத்தவர்; பயனிலை - கரப்பர், கரவார். உடைமை - உடன்பாட்டுக் குறிப்புத் தொழிற்பெயர். அஞ்சா என்பதில் மல் விகுதி தொகுத்தல் விகாரம். கரவு: கர - பகுதி, உ - தொழிற்பெயர் விகுதி, வ் - உடம்படுமெய். நெஞ்சத்தவர் - சினை யடியாகப்பிறந்த பெயர்ப்பகுபதம்; நெஞ்சம் - பகுதி, அத்து: அ - சாரி யைகள், அர் - விகுதி, பகுதி ஈற்று மகரக்கேடும் அத்துச்சாரியை முத லகரக்கேடும், அச்சாரியை ஈற்று உகரக்கேடும், வகரத்தோற்றமும் சந்தி. (உரு)

26. மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் - மன்னனுக்குத்
தன்றேச மல்லாற் சிறப்பில்லை கற்றோற்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு.

(இ-ள்.) மன்னனுக்கு - அரசனுக்கு, தன் தேசம் அல்லால்-தன் னாட்டில் அல்லாமல், சிறப்பு இல்லை - (பிரதேசங்களில்) நன்கு மதிப்பு (பெருமை) இல்லை; கற்றோற்கு - (நூல்களைக்) கற்ற புலவனுக்கு (வித்துவானுக்கு), சென்ற இடம் எல்லாம் - (அவன்) போனதேசங் களில் எல்லாம், சிறப்பு - பெருமையுண்டாகும்; (ஆதலால்) மன்ன னும் - அரசனையும், மாசு அற கற்றோனும் - குற்றமறக்கற்ற வித்து வானையும், சீர் தூக்கின்-ஆராயுமிடத்து, மன்னனில்-அரசனைக்காட்டி லும், கற்றோன் - கற்ற புலவனே, சிறப்பு உடையன் - சிறப்புடைய னவன், எ - று.

(க-து.) அரசரிலும் கற்றோரே சிறப்புடையராவர்.

(வி-ரை.) எழுவாய் - கற்றோன்; பயனிலை-உடையன்; செ-ள்-சிறப்பு. உம்மைகளிரண்டும் எண்ணுப்பொருளில் வந்தன. கற்றோன் - வினையாலணையும் பெயர். சீர் தூக்கின் : சீர் தூக்கு - பகுதி, இன் - எதிர்கால வினையெச்ச விகுதி. மன்னனின் - நீக்கப்பொருளில் வந்த ஐந்தாம் வேற்றுமைத் தொகாநிலைத்தொடர், உடையன் என்னும் குறிப்பு வினைமுற்றைக் கொண்டது. (உசு)

27. கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொற்கூற்றம்
அல்லாத மாந்தர்க் கறங்கூற்றம் - மெல்லிய
வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம் கூற்றமே
இல்லிற் கிசைந்தொழுகாப் பெண்.

(இ-ள்.) மெல்லிய வாழைக்கு - மிருதுவாகிய வாழைமரத்துக்கு, தான் ஈன்ற காய் - தான் பெற்ற காய், கூற்றம் - எமன்போலத் துன்பஞ்செய்யும்; (அதுபோலக்) கல்லாத மாந்தர்க்கு - நூல்களைக் கற்கா மனிதருக்கு, கற்று உணர்ந்தார் சொல்-நூல்களைப் படித்து (அவற்றின் பொருளை) அறிந்தவருடைய உறுதிச்சொல், கூற்றம் - எமன்போலத் துன்பஞ்செய்யும்; அல்லாத மாந்தர்க்கு-தருமத்தின் வழிச்செல்லாத மனிதர்களுக்கு, அறம் - தருமதேவதை, கூற்றம் - எமன்போலத் துன்பஞ் செய்யும்; இசைந்து ஒழுகா பெண் - (கணவன் கருத்துக்கு) ஒத்து நடவாதபெண்ணே, இல்லிற்கு - குடும்பத்திற்கு, கூற்றம் - எமன்போலத் துன்பஞ்செய்யும், எ - று.

(க - து.) மூடர்க்குக் கற்றவர் சொல்லாலும், பாவிகட்குத் தரும தேவதையாலும், கணவனுக்குக் கற்பில்லா மனைவியாலும் துன்பமாம்.

(வி - ரை.) எழுவாய் - சொல், அறம், பெண்; பயனிலை - கூற்றம். சொல் - சொல்லாதபெயர். இல் - இடவாகுபெயர். ஏ - பிரிநிலை.

அல்லாத - எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சம்; அல் - பகுதி, ஆ - சாரியை, ல்-சந்தி, த் - எழுத்துப்பேறு, அ - விகுதி. மாந்தர் - பன்மையிலேயே வரும்பெயர். ஈன்ற : ஈன் + ற் + அ-பகுதி, இடைநிலை, விகுதிகள். (உஎ)

28. சந்தன மென்குறடு தான்றேய்ந்த காலத்தும்
கந்தங் குறைபடா தாதலால் - தந்தம்
தனஞ்சிறிய ராயினுந் தார்வேந்தர் கேட்டால்
மனஞ்சிறிய ராவரோ மற்று.

(இ - ள்.) மெல் சந்தனம் குறடு-மிருதுவாகிய சந்தனக்கட்டையானது, தான் தேய்ந்த காலத்தும்-தான்தேய்ந்தபொழுதும், கந்தம் குறைபடாது - (தன்னுடைய) வாசனை குறையாது; ஆதலால் - ஆகையால், தார் வேந்தர் - சேனையையுடைய அரசர், கேட்டால் - கேட்டினால், தம் தம் தனம் சிறியர் ஆயினும் - தங்கள் தங்களுடைய பொருள் குறைந்தவர் ஆனாலும், மனம் சிறியர் - மனவுறுதி குறைந்தவர், ஆவரோ - ஆவர்களோ (ஆகார்), எ - று.

(க - து.) அரசர் செல்வத்திற் குறைந்தாலும் மனவலி குறையார்.

(வி - னா.) எழுவாய் - வேந்தர்; பயனிலை - ஆவரோ. மென் குறடு - பண்புத்தொகைநிலைத்தொடர். தம் தம் என்னும் அடுக்குத் தனிமைப்பொருட்டு. மற்று - அசை. ஓ - எதிர்மறை. (உஅ)

29. மருவினிய சுற்றமும் வான்பொருளு நல்ல
உருவு முயர்குலமு மெல்லாந் - திருமடந்தை
ஆம்போ தவளோடு மாகு மவள்பிரிந்து
போம்போ தவளோடும் போம்.

(இ - ள்.) மருவு - வந்துசேர்ந்த, இனிய சுற்றமும் - இனிமையாகிய உறவும், வான் பொருளும் - மிகுந்த பொருளும், நல்ல உருவும் - சிறந்த அழகும், உயர் குலமும் - உயர்வாகிய குலமும், எல்லாம் - ஆகிய இவையெல்லாம், திருமடந்தை - திருமகள் (சீதேவி), ஆம்போது - வந்து கூடும்போது, அவளோடும் ஆகும் - அச்சீதேவியுடனே வந்து கூடும்; அவள் - அச் சீதேவி, பிரிந்து போம்போது - நீங்கிப் போகும் போது, அவளோடும் போம் - அச் சீதேவியுடனே போய்விடும், எ-று.

(க - து.) சுற்றமும் பொருளும் அழகும் உயர்குலமும் நிலையையுடையன அல்லவாம்.

(வி - ரை.) எழுவாய் - எல்லாம்; பயனிலை - ஆகும், போம். இனிய - உடன்பாட்டுக் குறிப்புப்பெயரெச்சம். முதற்கணுள்ள உம்மைகள் ச-ம் எண்ணுப்பொருளில் வந்தன. பின்னுள்ள இரண்டில் முன்னது உயர்வுசிறப்பு; பின்னது இழிவுசிறப்பு. ஆம், போம் என்பவற்றில் உயிர்மெய் கெட்டது. (உக)

30. சாந்தனையுந் தீயனவே செய்திடினுந் தாமவரை
ஆந்தனையுங் காப்ப ரறிவுடையோர் - மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாங் கண்டீர் மரம்.

(இ - ள்.) மரம் - மரமானது, மாந்தர் - மனிதர்கள், குறைக்குந் தனையும் - (தன்னை) வெட்டுமளவும், குளிர் நிழலை தந்து - குளிர்ந்த நிழலைக் கொடுத்து, மறைக்கும் - (வெயிலை) மறைக்கும்; (அதுபோல) அறிவுடையோர் - அறிவுடையவர்கள், சாந்தனையும் - சாகுமளவும், தீயனவே செய்திடினும் - (தமக்குப் பிறர்) தீமைகளையே செய்தாராயினும்,

தாம் அவரை - தாங்கள் அத்தீமை செய்தாரை, ஆம் தனையும் காப்பார்- (தம்மால்) ஆகுமளவும் பாதுகாப்பார், எ - று.

(க - து) அறிவுடையோர் தமக்குத் தீங்கு செய்தவர்களையும் நன்மை செய்து காப்பார்.

(வி - ரை.) எழுவாய் - அறிவுடையோர், பயனிலை - காப்பார்; செ - ள் : அவரை. செய்திடினும் - இதிலுள்ள உம்மை இறந்தது தழீஇயதனோடு இழிவுசிறப்புமாம். சாந்தனையும், ஆந்தனையும், குறைக்குந்தனையும் - இவற்றிலுள்ள உம்மை முற்றுப்பொருளோடு உயர்வு சிறப்புமாம். ஏ - பிரிநிலை. ஆம், கண்டீர் என்னும் இரண்டசைநிலைகளில் பின்னது முன்னிலைக்குரியது. தந்து: தா - பகுதி குறுகிற்று; த்- சந்தி, த்-இடைநிலை, உ - விகுதி, த் - ந் ஆக மெலிந்தது. (௩௧)

வாக்குண்டாம் மூலமும் உரையும்

முற்றிற்று.

சிவமயம்.

வாக்குண்டாம்

செய்யுள் முதற்குறிப்பகராதி.

செய்யுள் முதற்குறிப்பகராதி முற்றிற்று.

காலப்பிரமாணம்.

நிமிஷம் பதினைந்து கொண்டது ஒருகாஷ்டை. காஷ்டை முப்பது கொண்டது ஒருகலை. கலை முப்பது கொண்டது ஒரு முகூர்த்தம். முகூர்த்தமென்பது இரண்டுநாழிகை முகூர்த்தம் முப்பதுகொண்டது பகலும் இரவுங்கூடிய ஒருநாள். நாள் பதினைந்து கொண்டது ஒரு பக்ஷம். பக்ஷம் இரண்டு கொண்டது ஒரு மாசம். மாசம் ஆறுகொண்டது ஒரு அயனம். அயனம் இரண்டுகொண்டது ஒரு வருஷம். இம்மனுஷ வருஷம் ஒன்று தேவர்களுக்கு ஒரு நாளாம். தேவர்களுக்கு உத்தராயணம் பகலும், தக்ஷிணாயனம் இராத்திரியுமா யிருக்கும். மனுஷவருஷம் முந்நூற்றறுபது கொண்டது தேவர்களுக்கு ஒருவருஷமாம். தேவவருஷம் பன்னீராயிரங் கொண்டது ஒரு சதுர்யுகமாம்.

யுகம்.	தேவவருஷம்.	மனுஷவருஷம்.
கிருதயுகம்	௪௮00	௧௭ லக்ஷத்து ௨௮000
திரேதாயுகம்	௩௬00	௧௨ லக்ஷத்து ௯௬000
துவாபரயுகம்	௨௪00	௮ லக்ஷத்து ௬௪000
கலியுகம்	௧௨00	௪ லக்ஷத்து ௩௨000
சதுர்யுகம்	௧௨000	௪௩ லக்ஷத்து ௨0000

இப்படிச் சதுர்யுகம் ஆயிரம் திரும்பினால், பிரமாவுக்கு ஒரு பகலாகும்; பின்னும் ஆயிரந் திரும்பினல் பிரமாவுக்கு ஓரிராத்திரியாகும். ஆகவே இரண்டாயிரஞ் சதுர்யுகங் கொண்டது பிரமாவுக்கு ஒருநாளெனப்படும். இந்த நாள் முப்பது கொண்டது ஒருமாசம். இந்த மாசம் பன்னிரண்டு கொண்டது ஒருவருஷம். இந்த வருஷம் நூறானல், பிரமாவுக்கு ஆயுசு

முடியும். இவ்வியல்புடைய பிரமாக்கள் எண்ணில்லாதவர்கள் பிறந்திறந்தார்கள். பிரமாவினுடைய ஆயுசு பரமெனப் பெயர் பெறும். அதிற் பாதியாகிய ஐம்பதுவருஷம் பரார்த்தமென்று சொல்லப்படும்.

பிரமாவினுடைய பகலாகிய ஆயிரஞ் சதுர்யுகத்திலே பதினன்கு மநுக்கள் அதிகாரம்பண்ணுவார்கள். அவர்கள்பெயர்:- சுவாயம்புவர், சுவாரோசிஷர், ஔத்தமர், தாமசர், ரைவதர், சாக்ஷுஷர், வைவஸ்வதர், சூரியசாவர்ணி, தக்ஷசாவர்ணி, பிரமசாவர்ணி, தருமசாவர்ணி, ருத்திரசாவர்ணி, ரோச்சியர், பாவியர் என்பவைகளாம். ஒவ்வொரு மநுவந்தரத்துக்கு எழுபத்தொரு சதுர்யுகமாகும். எழுபத்தொரு சதுர்யுகம், தேவமானத்தினலே எட்டுலக்ஷத்தைம்பத்தீராயிரம் வருஷங்களாம். மனுஷ்யமானத்தினலே முப்பதுகோடியே அறுபத்தேழு லக்ஷத்திருபதினயிரம் வருஷங்களாம். ஒருமநுவந்தரத்துக்கு எழுபத்தொரு சதுர்யுகமாகப் பதினன்கு மநுவந்தரத்துக்கும் தொளாயிரத்துத் தொன்னூற்றுநான்கு சதுர்யுகமாகும். பிரமாவின் பகலிலே மிஞ்சிய சதுர்யுகம் ஆறு.

இப்படிப் பதினன்கு மநுவந்தரங்களானல், பிரமாவுக்கு ஒருபகலாம். இதன்முடிவிலே தினப்பிரளயம் உண்டாகும். அப்பொழுது பிரமா அப்பகலளவினதாகிய இராத்திரியிலே யோகநித்திரை செய்வர். இப்படி ஆயிரஞ் சதுர்யுகவளவையையுடைய இராத்திரி கடந்தபின்பு பிரமாத் திரும்பியும் படைத்தற்றொழில் செய்வர். பிரமாவுக்கு ஒருபகல் ஒருகற்பமெனப் படும். கற்பமாவது சிருட்டிமுதற் பிரளயமிறுதியாகிய காலம். ஒருகற்பத்துக்கு மனுஷவருஷம் நானூற்றுமுப்பத்திரண்டு கோடி.

பிரமாவினுடைய ஒருபகலிலே பதினன்கிந்திரர்கள் இறப்பர்கள். ஒருமாசத்திலே நானூற்றிருபதிந்திரர்கள் இறப்பர்கள்.

ஒருவருஷத்திலே ஐயாயிரத்து நாற்பதிந்திரர்கள் இறப்பர்கள். பிரமாவுடைய ஆயுசுளளே ஐந்துலக்ஷத்து நாற்பதினாயிரம் இந்திரர்கள் இறப்பர்கள்.

தற்காலத்தில் இருக்கின்ற பிரமாவுக்கு முதற்பரார்த்த மாகிய ஐம்பது வயசுஞ்சென்றன. இப்போது நடப்பது இரண்டாம் பரார்த்தத்தில் முதல்வருஷத்து முதன்மாசத்து முதற்றினம். இது சுவேதவராககற்பமெனப்படும். பிரளயசலத்தில் முழுகியிருந்த பூமியை விஷ்ணு வெள்ளைப்பன்றி யுருவங் கொண்டு மேலே எடுத்த கற்பமாதலிற் சுவேதவராககற்ப மெனப்பட்டது. இத்தினத்திலே சுவாயம்புவமநு, சுவாரோசிஷமநு, ஔத்தமமநு, தாமசமநு, ரைவதமநு, சாக்ஷுஷமநு என்னும் ஆறு மநுக்கள் இறந்துபோனார்கள். இப்போது ஏழா மநுவாகிய வைவஸ்த மநுவினுடைய காலம் நடக்கின்றது. இவருடைய காலத்திலே இருபத்தேழு சதுர்யுகங்கள் சென்றன. இப்பொழுது இருபத்தெட்டாஞ் சதுர்யுகத்துக் கலியுகம் நடக்கின்றது.

மாசம் சௌரமாசமும், சாந்திரமாசமுமென இருவகைப் படும். சூரியன் ஒருராசியை அனுபவிக்குங் காலம் சௌரமாசம். ஒரு அமாவாசை கழித்த பிரதமைமுதல் மற்றொரு அமாவாசைவரையும் உள்ள முப்பது திதிகொண்ட காலம் சாந்திரமாசம். சூரியன் பன்னிரண் டிராசிகளையுஞ் சுற்றிவருங்காலம் சௌரமான வருஷம். அது ஏறக்குறைய முந்நூற்றறுபத்தைந்து தினங்கொண்டது. சந்திரனுடைய சஞ்சாரத்தினால் உண்டாகிய பன்னிரண்டு அமாவாசை கொண்டகாலம் சாந்திரமான வருஷம். நான்கு வருஷத்துக்கு ஒருதரம் சாந்திரவருஷத்திலே பதின்மூன்று அமாவாசைவரும். அதில் அதிகமாகிய ஒரு மாசத்தை அதிகமாசமென்று வழங்குவர். சூரியன் மேடராசியிற் பிரவேசிக்குந் தினமே சௌரவருஷப்பிறப்பு. சூரியன்

மீனராசியிற் பிரவேசித்த மாசமாகிய பங்குனிமாசத்துச் சுக்கிலபக்ஷத்துப் பிரதமையே சாந்திர வருஷப்பிறப்பு.

காலம்.

காலம் என்பது உலகம் நடைபெறுதற்கு முக்கிய காரணமாயுள்ளது. காலத்தை நம்மவர்கள் மிகக்குறைந்த பிரமாணமுள்ள நிமிஷம் முதலாக மேன்மேற் கூடின பிரமாணம் உள்ளவைகளாகப் பகுத்து வரையறை செய்து, அவைகளுக்கு ஒவ்வொரு பெயர் கொடுத்திருக்கிறார்கள். அவைகளின் பெயர்கள் நிமிஷம், காஷ்டை, கலை, நாழிகை, முகூர்த்தம் என்னும் இவை முதலாயினவாம். அங்கிலேயர்கள், இந்தக் காலத்தை செக்கன், மினிட்டு, மணி என்பனவாக வெவ்வேறு வகைப்பட அளவு செய்து, பெயர் கொடுத்து வழங்குகின்றார்கள். நமக்கு இரண்டரை நாழிகை நேரம் அங்கிலேயர்களுக்கு ஒருமணி எனப்படும். இப்படிக் கணக்கிடும்பொழுது, அங்கிலேயர்களுடைய இருபத்துநான்கு மணிநேரம் நமக்கு அறுபது நாழிகை ஆகிறது. இந்த அறுபது நாழிகையில், சூரியோதயம் முதலாக முன் முப்பது நாழிகையும் பகல் என்றும், சூரியாஸ்தமயனம் முதலாகப் பின் முப்பது நாழிகையும் இரவு என்றும், இந்த இரண்டும் சேர்ந்து ஒருநாள் என்றும், வழங்கப்படும். நாள், வாரம், மாசம், வருஷம் என்னும் இவைகளைப் பெரும்பான்மையும் இந்தியர்களைப்போலவே அங்கிலேயரும் கொள்வர்.

இப்படிக் காலத்தைப் பகுத்துக்கொண்டது, நாம் செய்யுந் தொழில்களெல்லாம் அது அது முற்றுப்பெற வேண்டிய அளவில் முற்றுப்பெறுதற் பொருட்டாம். காலத்தைப்பற்றிச் சிந்தியாவிட்டால், ஒருவரும் ஒரு தொழின்முயற்சியும் செய்யாது

கெடுவர். காலம் அருவமாயிருப்பினும், அது நமக்கு மிகவும் உபயோகியாயிருக்கிறது. அதனுடைய கழிவையும், கழிந்த அது நமக்குப் பின்னை கிடைக்கப்பெறுமையையும், நாம் எப பொழுதும் நினைத்தல்வேண்டும். எப்படியெனில், ஒருவித்திய சாலையிற் காலை எட்டுமணிக்கு வந்து கல்வி கற்கவேண்டிய ஒரு மாணுக்கன், ஒன்பது மணிக்கு வருவானேயானல் முதல் மணியிற் கற்பித்த பாடங்களை இழந்து அந்த இழந்த காலத்துக் காகக் கவலைப்படுகின்ருன்; இந்த ஒரு மணிநேரமும் பின் அவ னுக்குக் கிடைப்பதேயில்லை.

இப்படிக் காலத்தைக் குறித்து நாம் நினைக்கிறதினலே னங்களுடைய மனமொழிமெய்கள் தத்தம் தொழில்களைச சோம்பலின்றிச் செய்து நல்வழிப்பட, அதனல் இம்மை மறு மை இன்பங்களைத் தப்பாது அடையலாம். அளவிறந்த பர மாணுக்கள் ஒருங்கு திரண்டு மலைகளாதல்போல, அநேக நிமி ஷங்கள் ஒருங்குசேர்ந்து வருஷங்களாகின்றன. அவைகள் கழியக் கழிய நம்முடைய ஆயுசும் கழிகின்றது.

காலத்தை வரையறைசெய்துகொள்வதற்காகக் கடவுளா கொடுக்கப்பட்ட கருவிகள் சூரியன் முதலாகிய கிரகங்கள் அவைகளை ஆதாரமாகக்கொண்டு மனிதர் காலவரையறை செய் துகொள்ளுங் கருவிகள் கடிகாரங்கள். கடிகாரம் வைத்திரு பது தொழின் முயற்சிக்கு ஏதுவாயிருக்கும்.

	அ.	ப.
திருக்குறள் மூலம் ...	4	0
நன்னூல் மூலம் ...	2	0
ஔவைகுறள் மூலம் ...	2	0
யாப்பிலக்கண வினாவிடை	2	0
அணியிலக்கண வசனம் ...	4	0
வச்சணந்திமாலை உரை ...	2	0
சௌந்தரியலகரி உரை ...	6	0
குசேலோபாக்யான மூலம்	6	0
நைடத மூலம் ...	12	0
அஷ்டப்பிரபந்த மூலம் ...	8	0
ஒருதுறைக்கோவை ...	4	0
மீனாக்ஷியம்மன்பிள்ளைத்தமிழ்	2	0
மறைசையந்தாதி உரை ...	5	0
கல்வளையந்தாதி உரை ...	5	0
சரஸ்வதியந்தாதி உரை ...	5	0
குடாரம்(குறளைப்பற்றியது)	1	0
சிகாளத்திக்கலம்பகம் ...	2	0
கைவல்யநவநீதமூலம் ...	2	0
வேதாந்தசூளாமணி மூலம்	2	0
கீதாசாரத்தாலாட்டு ...	1	0
பிரச்னோத்தர ரத்னமாலிகை	2	0
சிவப்பிரகாச வெண்பா ...	2	0
பர்த்ருஹரி வைராக்யசதகம்	3	0
உபநயனார்த்த தீபிகை ...	0	6
பத்திரகிரியார் புலம்பல் ...	1	6
சைவசித்தாந்த வரலாறு ...	4	0
சிவராத்திரி மான்மியம் ...	4	0
ஸ்தலயாத்திரைப்பொதுவிதி	6	0
அகஸ்தியர் தேவாரத்திரட்டு உரையுடன் ...	12	0
திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணச்செய்யுள்திரட்டு உரையுடன்	12	0

	அ.	ப.
பட்டணத்தார் பாடல் ...	1	0
பரமானந்த தீபம் ...	1	0
கந்தரநுபூதிநூறுபாடலுரை	6	0
தாலாட்டுப் பிரபந்தம் ...	4	0
மஹாதேவமாலை ...	1	0
விநாயகரகவல் ...	0	6
நால்வர் நான்மணிமாலை ...	0	6
சைவ தூஷண பரிகாரம்	4	0
இலக்ஷ்மி தோத்திரம் ...	0	3
விநாயக சிவசத்தி கவசம்	1	0
மநுமுறைகண்ட வாசகம்	4	0
புஷ்பவிதி, புஷ்பபலன்...	2	[illegible]
சிவபூஜைத்திரட்டு ...	2	[illegible]
சிவபூஜையகவல் ...	1	[illegible]
அஷ்டோத்தர சதநாமாவளி	1	[illegible]
ஒங்காரத்தின் மகத்துவம்	1	[illegible]
அஷ்டாக்ஷர மகத்துவம்...	1	0
ஆரியர் சந்தியாவந்தனம்...	1	0
கலியுகதர்மம் ...	1	0
ஏகாந்தசேவை ...	1	0
ஸ்ரீ வைஷ்ணவ சமயதீபம்	0	9
ஸ்தவரத்நஹாரம் (கிரந்தம்)	2	0
சித்தாந்தப் பிரகாசிகை ...	2	0
சித்தாந்த தத்துவலக்ஷணம்	0	9
பஞ்சீகரண வேதாந்த சித்தாந்தம் ...	2	0
ஸ்ரீ தத்துவபோதம்	1	0
திருவள்ளுவர் சரித்திரம்...	1	6
பிரஹ்லாத சரித்திரம் ...	4	0
சமயகுரவர்நால்வர்சரித்ரம்	2	0
மனமோகனராஜன்சரித்ரம்	1	6
புருஷத்வேஷபூதகிசரித்ரம்	1	6
சடன்பட்டகந்தன்சரித்ரம்	1	0